C.P. No. 5 /  2019
Date : 15.12.2020
Witness:  MW 2   Thiru.A.Ashok Kumar

சாட்சி இடைமனு உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி-

இரண்டாம் எதிர்மனுதாரர் நிர்வாகம் இந்த மனு சம்பந்தப்பட்ட தொழில் தாவா I.D.No.76/2011 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.35092/2019 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது. மேற்படி W.P.No.35092/2019 -ன் பிரமாண வாக்குமூலம் மற்றும் மனு புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன் அது Ex.M.3 ஆகும். I.D.No.76/2011 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை நிறுத்தி வைக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி Writ மனுவில் W.M.P.No. 35884/2019 என்ற Stay மனு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. அந்த மனு நகல் தாக்கல் செய்கிறேன் அது Ex.M.4 ஆகும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (மனுதாரர் தரப்பில்)-

இந்த கணக்கீட்டு மனு C.P.No.5/2019 மனுவை தொடர்ந்து நடத்துவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு ஏதும் வழங்கியுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சம்பந்தம் உள்ளது. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

( 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியிடம் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது )